**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

**OS.NO. 18/2021 PW-2**

| | |
|---|---|
| Name | சத்தியராஜ் |
| Husband/Father Name | சம்பத் |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | கரூர் வைஸ்யா வங்கி, கிளை மேலாளர், கொற்காத்தூர் |
| Age | 38 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 30.08.2024 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட சம்மனின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சுஜதா க/பெ நாகேஷ்வரன் அவர் எங்கள் வங்கியில் வைத்திருக்கும் வங்கி கணக்கு எண் 1727155000024903 தொடர்பாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சுஜதா என்பவரின் வ.சா.ஆ.1 ஆவணமாக குறியீடு செய்யப்பட்ட காசோலை போதிய பணம் இல்லாத காரணத்தால் திருப்பப்பட்டது குறித்து சாட்சியம் அளிக்கிறேன். வ.சா.ஆ.1 காசோலை 20.03.2021 அன்று போதிய பணம் இல்லாத காரணத்தால் திருப்பப்பட்டது. சுஜாதா என்பவரின் சேமிப்பு கணக்கு பட்டியல் **வ.சா.ஆ.9** ஆகு குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

பிரதிவாதி சுஜதாவுக்கு உங்கள் வங்கியில் கணக்கு உள்ளதா என்றால் ஆமாம். அந்த வங்கி கணக்கிற்கு எப்போது காசோலை புத்தகம் வழங்கப்பட்டது என்றால் வங்கி கணக்கு தொடங்கப்பட்ட காலத்திலேயே

வழங்கப்பட்டது. வ.சா.ஆ.1 காசோலை எண் 000004 என்ற காசோலைக்கு பிறகு அதன் தொடர்சியான காசோலை எண்கள் குறித்த விவரம் தெரியுமா என்றால் நான் வங்கி ஆவணங்களை பார்த்த போது சேமிப்பு கணக்கு குளோஸ் ஆகிவிட்டது என்பதை தெரிந்து கொண்டேன், ஆனால் அது குறித்த ஆவணத்தை எடுத்துவரவில்லை.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கோரிக்கைக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/- *********
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.